


25. 11. 2025

தலைப்புச் செய்திகள்

- நாட்டின் விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி கூறியுள்ளார்.
- சுய சார்பு பாரதத்திற்கு எடுத்துக்காட்டாக இந்திய கப்பல்கள், நம் நாட்டிலேயே கட்டமைக்கப்படுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு. ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.
- கோவை காந்திபுரத்தில் 208 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான செம்மொழி பூங்காவினை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு இன்று திறந்துவைத்தார்.
- எத்யோப்பியா எரிமலை வெடிப்பால் வான்மண்டலங்களில் கரும்புகை பரவியதை அடுத்து சென்னையில் உள்நாட்டு, சர்வதேச விமான சேவைகள் பாதிக்கப்பட்டன.
- குமரிக்கடலை ஒட்டிய தென்மேற்கு வங்ககடலில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இனி விரிவான செய்திகள்

************

பிரதமர்

நாட்டின் அனைத்து பிரிவினரும், குறிப்பாக விளிம்பு நிலை மக்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த மத்திய அரசு உறுதி பூண்டிருப்பதாக பிரதமர் திரு.நரேந்திரமோடி தெரிவித்துள்ளார்.

உத்திரபிரதேச மாநிலம் அயோத்தி ராமர் கோவிலில் கட்டமைப்பு பணிகள் நிறைவடைந்தது குறிக்கும் வகையில் இன்று ராம்ஜென்ம பூமியில் கொடி ஏற்றிவைத்து உரையாற்றிய பிரதமர், அடுத்த ஆயிரம் ஆண்டுகளில் நாட்டின் கட்டமைப்பை மேம்படுத்த அரசு செயலாற்றும் என்றார்.

நம் கலாச்சாரத்தின் மீது நாம் பெருமை கொள்வதன் மூலமே நாடு வளரும் என்று கூறிய அவர், அடிமைதன மனபாங்கிலிருந்து வெளியேறுவதன் அவசியத்தை எடுத்துரைத்தார்.

அடுத்த 10 ஆண்டுகளில் இதற்கான இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

ஜனநாயகம் நமது மரபு என்றும் பிரதமர் குறிப்பிட்டார்.

கடந்த 11 ஆண்டுகளில் இந்தியா மிகப்பெரிய பொருளாதார வளர்ச்சி நாடாக உருவெடுத்துள்ளது குறித்து அவர் மகிழ்ச்சி தெரிவித்தார்.

வளர்ச்சி அடைந்த பாரதத்தின் முதுகெலும்பாக அயோத்தியா திகழ்கிறது என்றும், புதுமையான

தொழில்நுட்பமும், ஆன்மீகமும் கலந்த கலவையாக வரும் காலங்களில் இது உருவெடுக்கும் என்றும் குறிப்பிட்டார்.

முன்னதாக பிரதமர் பங்கேற்ற சாலை பேரணியில் ஆயிரக்கணக்கான மக்கள் சாலையின் இருமருங்கிலும் திரண்டிருந்து அவரை வரவேற்றனர்.

பிரதமர் இன்றுமாலை குருக்-ஷேத்ராவில் Guru Tegh Bahadur–இன் 350ஆவது தியாக திருநாள் நிகழ்ச்சிகளில் பங்கேற்கிறார்.

************

ராஜ்நாத்சிங்

இந்திய கடற்படை மற்றும் கடலோர காவல்படையின் கப்பல்கள் தற்போது நம் நாட்டு கப்பல்கட்டும் தளங்களிலேயே வடிவமைக்கப்படுவதாக பாதுகாப்புத்துறை அமைச்சர் திரு.ராஜ்நாத்சிங் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் கடல்சார் கருத்தரங்கில் இன்று உரையாற்றிய அவர், பிரதமரின் சுய சார்பு பாரத தொலைநோக்கு பார்வைக்கு இவை சான்றாக திகழ்கின்றன என்றார்.

நம் நாட்டில் 70 சதவிகித கடல்சார் வர்த்தகம் நடைபெறுவதாக கூறிய அவர், சரக்கு பரிவர்த்தனையில் இது வலுவானதாகவும், நமது பொருளாதாரத்திற்கு உகந்தது என்று சுட்டிக்காட்டினார்.

இதனால் உலகளாவிய விநியோக சங்கிலிகள் வலுப்பெறுவதோடு தேச பொருளாதாரமும் மேம்படுவதாக அவர் எடுத்துரைத்தார்.

கப்பல் கட்டும் தளங்கள் உலகளாவிய வர்த்தகத்தில் முக்கிய பங்காற்றுவதாக எடுத்துரைத்த அமைச்சர், பன்முக திறன்கொண்ட உலக தரத்திலான தொழில்நுட்பத்தோடு கப்பல் கட்டும் திறன் மேம்பாட்டையும், தொழில் வளர்ச்சியின் ஆழத்தையும் பறைசாற்றுவதாக குறிப்பிட்டார்.

L&T கப்பல் கட்டமைப்பு தளம் தொழில்நுட்ப ரீதியாக அதிவேகம் கொண்ட ஊடுருவல் மற்றும் ரோந்து கப்பல்களை உருவாக்கி உள்ளதாக எடுத்துரைத்த அவர் இவை தற்போது ஏற்றுமதி செய்யப்படுவதாக கூறினார்.

நட்பு நாடுகளின் கப்பல்கள் சிக்கலான தொழில்நுட்ப சார்ந்த உதவிகளுக்காக நம் நாட்டிற்கு வருவதாக எடுத்துரைத்த அவர், இது இந்தியாவின் திறனையும் நம்பகதன்மையையும் எடுத்துரைப்பதாக குறிப்பிட்டார்.

இந்தோ பசிபிக் பிராந்தியத்தின் சீரமைக்கும் தளமாக நம் தேசம் மேம்பட வேண்டும் என்றும் அமைச்சர் விருப்பம் தெரிவித்தார்.

************

பியூஷ்கோயல்

நான்கு புதிய தொழிலாளர் சட்டங்களால் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதோடு தேசிய அளவில் குறைந்த பட்ச ஊதியம் உறுதி செய்யப்படுவதாக மத்திய வர்த்தக தொழில் துறை அமைச்சர் திரு.பியூஷ்கோயல் தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் தேசிய வர்த்தக தலைவர்கள் மாநாட்டில் இன்று உரையாற்றிய அவர், இதனால் சமூக பாதுகாப்பு

பலன்கள் விரிவடைவதாகவும், சிறந்த தொழில் சார்ந்த நடைமுறைகள் அமல்படுத்தப்படுவதாகவும் கூறினார்.

வர்த்தகர்களுக்கு ஒரே உரிமம் சார்ந்த முன்னோடி திட்டத்தை மத்திய அரசு பரிசீலித்து வருவதகாவும் அமைச்சர் எடுத்துரைத்தார்.

************

பாரத ஸ்டேட் வங்கி

நாட்டில் நடைமுறைபடுத்தப்பட்டுள்ள புதிய தொழிலாளர் சட்டங்கள் பொருளாதாரத்தை மேம்படுத்துவதோடு வேலைவாய்ப்பின்மை விகிதத்தையும் குறைக்கும் என்று பாரத ஸ்டேட் வங்கி தெரிவித்துள்ளது.

இப்புதிய சட்டங்களால் 77 லட்சம் கூடுதல் வேலைவாய்ப்புகள் உருவாகும் என்றும், தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதோடு, சமூக பாதுகாப்பு திட்டத்தின் கீழ் கொண்டுவரப்படும் பயனாளிகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கும் என்று இவ்வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

30 சதவிகித சேமிப்பு விகிதத்தோடு, தொழிலாளர்களின் வாங்கும் திறன் அதிகரிக்கும் என்றும், இதனால் உள்நாட்டு செலவினம் மற்றும் பொருளாதார வளர்ச்சியில் உத்வேகம் ஏற்படும் என்றும் வங்கி தெரிவித்துள்ளது.

4 தொழிலாளர் நல சட்டங்களும், தொழிலாளர்களுக்கும், தொழில் நிறுவனங்களுக்கும் பயனளிப்பதோடு பாதுகாப்பான ஆக்கப்பூர்வமான பணி சூழலுக்கும் வகை செய்வதாக வங்கி கூறியுள்ளது.

இதுவரை நடைமுறையில் இருந்த 29 தொழிலாளர் நல சட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு 4 சட்டங்களாக ஏற்படுத்தப்பட்டதால் தொழிலாளர் சார்ந்த ஒழுங்குமுறை நடவடிக்கைகளும் பணிதிறன் ஆளுமையும் மேம்படும் என்றும் இவ்வங்கி குறிப்பிட்டுள்ளது.

************

முதலமைச்சர்

கோவை காந்திபுரம் பகுதியில் 208 கோடி ரூபாய் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள செம்மொழி பூங்காவினை பொதுமக்கள் பயன்பாட்டிற்காக முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் இன்று திறந்துவைத்தார்.

இன்றுமாலை, தொழில்முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தக துறை சார்பில் நடைபெறும் முதலீட்டாளர்கள் மாநாட்டில் முதலமைச்சர் பங்கேற்கிறார்.

இந்நிகழ்ச்சியில் ஒரு லட்சத்திற்கும் மேற்பட்டோருக்கு வேலை வாய்ப்பு அளிக்கும் வகையில் 44 ஆயிரம் கோடி ரூபாய் முதலீட்டில் 158 தொழில் நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொள்ளப்பட உள்ளன.

************

ஏர் இந்தியா

எத்யோபியா நாட்டில் எரிமலை வெடிப்பு எதிரொலியால் கரும்புகை சாம்பல் வான்மண்டலத்தில் பரவியதை அடுத்து விமான சேவைகள் சர்வதேச அளவில் இன்று பாதிக்கப்பட்டன.

இதனையடுத்து சென்னை விமான நிலையத்திலிருந்து மும்பை செல்லும் ஏர் இந்தியா விமானம், லண்டன் –

சென்னை பிரிட்டிஷ் ஏர்வேஸ் விமானங்கள் 3 மணி நேரத்திற்கு மேல் தாமதமாகியுள்ளன.

மேலும் பல்வேறு விமான சேவைகள் தாமதமானதோடு ரத்து செய்யப்படவும் வாய்ப்புள்ளதால் சர்வதேச விமான பயணிகள் தாங்கள் பயணிக்க வேண்டிய நிறுவனங்களை தொடர்பு கொண்டு உரிய விவரங்களை தெரிந்து அதற்கேற்ப பயணத்தை மேற்கொள்ளுமாறு சென்னை விமான நிலைய அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.

************

தர்மபுரி

தர்மபுரி மாவட்டத்தில் கால்நடை வளர்க்கும் விவசாயிகள் அரசின் மானியத்திட்டங்களை சிறந்த முறையில் பயன்படுத்திக்கொள்ளுமாறு ஆட்சித்தலைவர் திரு.சதீஷ் கேட்டுக்கொண்டுள்ளார்.

- வாய்ஸ் - -

************

வானிலை

குமரிக்கடல் மற்றும் அதனை ஒட்டிய தென்மேற்கு வங்ககடல் பகுதிகளில் புதிய காற்றழுத்த தாழ்வு பகுதி இன்று உருவானதாக சென்னை வானிலை ஆய்வு மைய இயக்குனர் திரு.செந்தாமரைக்கண்ணன் தெரிவித்துள்ளார்.

வாய்ஸ்

*இது வடக்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து அடுத்த 24 மணிநேரத்தில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாகவும்,*

*அதற்கு அடுத்த 24 மணி நேரத்தில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாகவும் மேலும் வலுப்பெறக்கூடும் என்றும் இம்மையம் கூறியுள்ளது.*

*இதன் காரணமாக வரும் 30ஆம் தேதிவரை தமிழகத்தில் கன மழை நீடிக்கும் என்றும்,*

*கன்னியாகுமரி திருநெல்வேலி தூத்துக்குடி ராமநாதபுரம் மாவட்டங்களில் இன்றும் நாளையும் கன மழை பெய்யக்கூடும் என்றும் இம்மையம் தெரிவித்துள்ளது.*

************

மழை மாவட்டங்கள்

தர்மபுரி மாவட்டத்தில் தொடர் மழை காரணமாக வாணியாறு அணைக்கு நீர்வரத்து அதிகரித்துள்ளது.

பாதுகாப்பு காரணங்களுக்காக கதவணை வழியாக உபரிநீர் திறப்பு அதிகரிக்க வாய்ப்புள்ளதால், வெங்கடசமுத்திரம், மோளையானூர், உள்ளிட்ட கரையோர கிராம மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம் திற்பரப்பு அருவியில் தண்ணீர் ஆர்ப்பறித்து கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் குளிக்க இன்றும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

பேச்சிப்பாறை கோதையாறு, பரளியாறு, குழித்துறை, தாமிரபரணி ஆற்றின்கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

************

நாமக்கல்

கொல்லிமலையில் தொடர்மமைழ காரணமாக ஆகாயகங்கை நீர்வீழ்ச்சி, மாசிலா அருவிகளில் சுற்றுலா பயணிகள் குளிக்க தடை விதிக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் கூறுகிறார்,

வாய்ஸ்

************

விருதுநகர்

விருதுநகர் மாவட்டம் சிவகாசியில் பெய்து வரும் தொடர்மழையால், 200 கோடி ரூபாய்க்கு பட்டாசு வர்த்தகம் பாதிக்கப்பட்டுள்ளதாக உற்பத்தியாளர்கள் தெரிவிக்கின்றனர்.

இதுகுறித்து எமது செய்தியாளர்..

வாய்ஸ்

************

தூத்துக்குடி

தூத்துக்குடி அனல்மின் நிலையத்தின் 3ஆவது அலகில் பழுது ஏற்பட்டதால் மின் உற்பத்தி இன்று பாதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே முதல், இரண்டாவது அலகுகளில் மின் உற்பத்தி நிறுத்தப்பட்ட நிலையில் 4 ஆவது 5ஆவது பிரிவுகளும் பராமரிப்பு பணிகளுக்காக நிறுத்தப்பட்டதால் ஆயிரத்து 50 மெகாவாட் மின் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது.

************

கிரிக்கெட்

குஹாட்டியில் இந்தியாவிற்கு எதிரான 2-வது இறுதி டெஸ்ட் கிரிக்கெட் போட்டியின் 4ஆம் நாளான இன்று தென்னாப்பிரிக்கா தனது 2-வது இன்னிங்சில் உணவு இடைவேளையின்போது 4 விக்கெட் இழப்பிற்கு 220 ரன் எடுத்திருந்தது.

தென்னாப்பிரிக்கா தற்போது 508 ரன் முன்னிலையில் உள்ளது.

முதல் இன்னிங்ஸ் ஸ்கோர்

தென்னாப்பிரிக்கா 489.

இந்தியா 201

************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது

************